மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் முடையூரில் இருந்து கம்பந்தூர், கீழ் பாப்பாம்பாடி, கீழ் மாம்பட்டு, அணிலாடி பிடாரிபட்டு வழியாக பெரிய தச்சூர் செல்லுகின்ற சாலையை கரும்பு உற்பத்தி திட்டத்தின் கீழ் சீர் செய்யமுடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கின்றார்கள். ஆனால் இப்போது அந்தத் திட்டம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் வருங்காலத்திலேயாவது அதனுடைய அவசியத்தை எண்ணிப்பார்த்து அந்தச் சாலையைச் சீர் செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தச் சாலையைப் பற்றி அந்த இடத்திலே உள்ள சவுத் இன்டியா சர்க்கரை ஆலையில் இருந்து பரிந்துரை ஏதும் அரசுக்கு அனுப்பவில்லை. அவர்கள் அனுப்பி வைத்தால் ஆராயப்படும்.

வேதாரண்யம் வேளாங்கண்ணி சாலைப் பாலத்தில் சுங்கம் வசூல் செய்தல்

*வினா எண் 602 : திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம்-வேளாங்கண்ணி சாலையில் கட்டப்பட்ட பாலத்தில் கடந்து செல்லும் வாகனங்களுக்கு சுங்கம் வசூல் செய்யப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை நிறுத்திவிடும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

Township for Nagoor

*Q. No. 603—THIRU R. UMANATH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) Whether there is any proposal under consideration to constitute a township for Nagoor town in Nagapattinam taluk; and

(b) if so, the details there of ?

1981 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, நாகூர் தற்போது நாகப்பட்டிணம் முனிசிபாலிட்டிக்கு உட்பட்டதாக இருக்கின்றது. நாகப்பட்டினம் முனிசிபாலிட்டியின் ..பைனான்ஸ் நிலைமை மிகவும் நலிவுற்றதாக இருக்கின்றது. .கந்தூரி பெஸ்டிவல் நடக்கின்றபோது 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வருகின்ற இடமாக அது இருக்கின்றது. அங்குள்ள மக்கள் தொகையும் அதிகமாக இருக்கின்றது. ஆகவே, நாகூரின் சுகாதார நிலைமையை நாகப்பட்டினம் முனிசிபாலிட்டியால் கவனிக்க முடியாத நிலைமை இருக்கின்றது. அதனால் பல நோய்கள் வருகின்றன. ஆகவே நாகூர் நகரியத்தை ஏற்படுத்துவதற்குரிய வகையிலே சற்று எஃபக்டிவாக டீல் பண்ணுவதற்கு இந்த அரசு ஏன் ஏற்பாடு செய்யக் கூடாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, பேரூராட்சியை நகராட்சியாக ஆக்க வேண்டும் என்றாலும் நகராட்சியை நகரியமாக ஆக்க வேண்டும் என்றாலும் சில விதிமுறைகள் இருக்கின்றன. Certain norms are being followed அந்த நிபந்தனைகளின் படி நாம் நகராட்சியை நகரியமாக மாற்ற முடியாது. அந்த நிபந்தனைப்படி 20,000-க்குக் குறையாமல் மக்கள் தொகை இருக்க வேண்டும். சாதாரணக் கணக்குகளிலே ரூபாய் 2 இலட்சத்திற்கும் குறையாத பணம் இருக்க வேண்டும். பொதுக் கணக்குகளிலே 3 இலட்சம் ரூபாய்க்கு மேலே பணம் இருக்க வேண்டும். இந்த விதிகளுக்கு உட்பட்டு வந்தால்தான் செய்ய முடியும். மேலும், மத்திய அரசிலே இருந்து 1981-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் வரையிலும் இதுபோன்ற நிலைமைகளை மாற்றியமைக்கக் கூடாது என்கின்ற உத்தரவு அதாவது பேன் ஆர்டர் இருக்கின்றது.

There is a ban order imposed by the Central Government

அது இருப்பதால் இப்போது பரிசீலிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோம்.

திரு. ரா. உமாநாத்: மத்திய அரசிடமிருந்து அப்படிப்பட்ட புதிய அமைப்புக்களை உண்டாக்கக்கூடாது என்ற பேன் இருந்தாலும் நம்முடைய மாநில அரசு புரப்போஸல்ஸை ஆய்வு செய்வதற்கு மத்திய அரசின் தடை குறுக்கே நிற்காது. ஆகவே, அந்த ஊரைச் சுற்றி பல கிராமங்கள் இருக்கின்றன.

மேலும், ஏராளமான பில்கிரிம்ஸ் வந்து போவதால் பில்கிரிம் டாக்ஸ் போடலாம். அந்த முறையிலே வழிவகைகளை உண்டாக்க முடியும். ஆகவே, கான்ஸ்ட்டிட்யூட் பண்ணுவதற்கு பேன் ஆர்டர் தடையாக இருந்தாலும் அதற்கான நிலைமைகள் பற்றி ஆய்வு செய்வதற்குரிய வகையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

(முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நாகப்பட்டிணத்தைப் பொறுத்த வரையில், நிதிநிலை சரியில்லை என்ற காரணத்தால், நேற்றுக்கூட 12 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி 12 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருந்தாலும், அங்கே குறை இருக்கிறது என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனாலும், அவைகளை எல்லாம் பரிசீலனை செய்து, நகராட்சியை நகரியமாக ஆக்குவதற்கு என்னென்ன வழி முறைகள் தேவையோ அவைகள் எல்லாம் எடுத்துக்கொண்டு பரிசீலிக்கப்படும்.

நிலக்கோட்டை—காமுப்பிள்ளை சத்திரம் நெடுஞ்சாலையின் குறுக்கே ஓடும் ஓடைகளின்மீது பாலம் கட்டும் பணி

*'வினா எண். 604—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதியில் நிலக்கோட்டை —காமுப்பிள்ளைச் சத்திரம் நெடுஞ்சாலையின் குறுக்கே உள்ள இரண்டு ஓடைகளால் மழைக் காலங்களில் பஸ் போக முடியாமல் மக்கள் கஷ்டப்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால் அந்த ஓடைகளின் குறுக்கே பாலம் கட்டும் உத்தேசம் அரசிற்கு உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஓடைகள் மீது பாலங்கள் கட்டும் பணி எந்தவித திட்டத்திலும் இடம் பெறவில்லை. இப்பணிகளை இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து மேற்கொள்வது பற்றி பரிசீலிக்கப்படும்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நெடுநாட்களாக இருந்து வரும் பிரச்னை. அங்கிருக்கும் டிபார்ட்மெண்ட் அதிகாரிகளை அணுகி கேட்டால் எஸ்டிமேட் போடப்பட்டு சேங்ஷனுக்கு அனுப்பப்பட்டி